## அகராதியியல் புலம்

நடத்தும்

## தமிழ்ச் செவ்விலக்கியமும் அகராதியியலும்

## (Tamil Classical Texts and Lexicography)

### பயிலரங்கம் – 06

### (01.08.2023 – 07.08.2023)

அறிவிப்பும் அழைப்பும்

மொழியில் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி அச்சொற்களுக்குரிய பொருளை விளக்குவது அகராதி எனப்படுகிறது. இதன் கூறுகளைக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய தொல்காப்பியத்திலேயே காணமுடிகின்றது. தமிழில் அகராதி என்ற சொற்பதிவு முதன்முதலில் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய அகராதி நிகண்டில் இச்சொல் நிகண்டுக்கு அடையாக அமைந்துள்ளது. பதினேழாம் நூற்றாண்டில் எழுந்த மோனை அகராதி, எதுகை அகராதி, பத்துச்சொல் அகராதி ஆகியனவற்றில் 'அகராதி' எனும் சொல் இடம்பெற்றிருப்பினும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சதுரகராதியில்தான் அகராதிக்குரிய பொருளோடு பயின்றுவந்துள்ளது.

தமிழ் அகராதியின் தொடக்கம் மெல்ல வளர்ந்து பதினெட்டாம் நூற்றாண்டில் இன்றுள்ள அகராதி வடிவினைப் பெற்றது. அகராதிகளுக்கு முன்னோடியான கூறுகளை உரியியலில் சொற்பொருள் விளக்க நூற்பாக்களில் தொல்காப்பியம் கூறுகின்றது. இடையியல், மரபியல் ஆகிய இரு பகுதிகளும் சொற்பொருள் வழக்குப்பற்றிக் கூறுகின்றன. எளிய சொற்களுக்குப் பொருள் கூறாமல் அரிய சொற்களுக்குரிய பொருளைத் தொல்காப்பியம் கூறுகின்றது. இக்காலத்தில் எளிதில் பொருள் விளங்கும் சொற்களான தீர்தல், தீர்த்தல் அக்காலத்தில் அரும்பொருளைக் கூறும் சொற்களாக அமைந்திருந்ததை இதன்வழியாகக் காணலாம்.

தொல்காப்பியம் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பகுத்துக் கூறுகின்றது. இதன்வழித் தமிழ்ச் சொற்றொகையின் களங்கள் பற்றி அறியலாம். சொற்பிறப்பியல் அகராதியியலின் சிறப்புக்கூறாக அமைகிறது. பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்குத் தொல்காப்பிய உரியியல் களம் அமைத்துத்தந்தது. தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய சில நிகண்டுகளின் குறிப்புகள், இறையனார் களவியல் உரை போன்றவை கூறும் செய்திகளைக் கொண்டு அகராதிக் கூறுகள் பற்றி அறியமுடிகின்றன.

தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கு இணைச்சொற் களஞ்சியம், வரலாற்றுமுறை அகராதி, காலமுறை அகராதி, கிளைமொழி அகராதி, மொழியியல் அகராதி, பலபொருள் ஒரு சொல் அகராதி, பலசொல் / இணைப்பொருள் அகராதி, செய்யுளியல் வகைச்சொல் அகராதி போன்ற அகராதிகள் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகின்றன. மேலும் செவ்விலக்கியச் சொற்களைத் தற்காலச் சொற்களுடன் ஒப்புநோக்கி அகராதி உருவாக்கலாம். இவ்வாறு உருவாக்கப்படும் அகராதிகள் தமிழ் மொழியின் சொல் வளத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் அமையும் என்பது திண்ணம்.

அகராதிக் களங்கள் குறித்த சிந்தனையை ஆய்வு மாணவர்களிடையே வளர்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

தமிழியல் சார்ந்த ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்கலாம்.

அகராதியியலில் புலமை பெற்ற பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்கள். பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: **01.08.2023** முதல் **07.08.2023** வரை (தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை நடைபெறும்.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

5. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshoplexi@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
10. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 26.07.2023. இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
11. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 27.07.2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
13. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**(இயக்குநர்)**

அகராதியியல் புலம்

நடத்தும்

## தமிழ்ச் செவ்விலக்கியமும் அகராதியியலும்

## (Tamil Classical Texts and Lexicography)

பயிலரங்கம் – 06

(01.08.2023 – 07.08.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் Name | தமிழ் | | | | | | | நிழற்படம் Photo |
| | | English | | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth / Age | | | | | | | | |
| 3. | பாலினம் / Gender (✓) | ஆண் / Male | | பெண் / Female | | திருநங்கை / Transgender | | | |
| 4. | வகுப்பு / Class (✓) | | | பொது/ General | | இ.பி.வ. OBC | | பட்டியல் இனம் SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி / Educational Qualification | | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள் / ஆண்டு / Date of Joining & year in M. Phil & Ph.D. | | | | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு / M. Phil & Ph.D. Research Topic | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br>University / College/Institute Address (Contact number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண்/ புலன எண்<br>Residential Address &<br>Contact number/WhatsApp Number | |
| 10. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக / Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் / Yes<br>இல்லை / No<br><br>(empty field below for details) |

இடம்:

நாள்: (கையொப்பம்)

நெறியாளர் / துறைத் தலைவர் /

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்